இராமசுவாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

23—

கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுதல்

*** 24935**—திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சியில் கோட்டாட்சியர் அலுவலக கட்டிடமும், சங்கராபுரத்தில் வட்டாட்சியர் அலுவலக கட்டிடமும் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கள்ளக்குறிச்சியில் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் சங்கராபுரத்தில் வட்டாட்சியர் அலுவலகம் இரண்டையும் கட்டும் பணி அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சியில் கோட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணிக்கும், சங்கராபுரத்தில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணிக்கும் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதா; எந்த இடத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. எந்த இடம் என்பது குறித்த தகவல் இப்போது என்னிடத்திலே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த இடத்தை உறுப்பினர்தான் சொல்லவேண்டும்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரத்தில் வட்டாட்சியர் அலுவகத்தை காட்டு வன்னஞ்சூர் என்ற பகுதியில் கட்ட அரசு இடம் தேர்வு செய்து இருப்பதாக அறிகிறேன். காட்டு வன்னஞ்சூர் பகுதியில் ஏற்கெனவே பி.டி.ஓ. அலுவலகம் இருக்கிறது. சங்கராபுரத்தின் மையப் பகுதியில் கோட்டைமேடு என்ற பகுதி,

1995 மார்ச் 16]

வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க நல்ல வாய்ப்பான இடமாக இருக்கிறது. ஆகவே சங்கராபுரம் மக்கள் நலனைக் கருதி, அந்த வட்டாட்சியர் அலுவலகத்தை, சங்கராபுரத்தின் மையப் பகுதியான கோட்டைமேடு பகுதியில் அமைக்க அரசு முன்வருமா ? மேலும் இந்த இரண்டு அலுவலகங்களையும் இந்த ஆண்டே கட்ட அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வில் உள்ளது என்று சொன்னாலும், இந்த ஆண்டே கட்டுவதற்கு இந்த அரசு முன்னுக்கு வரும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாவதாக, எந்த இடம் என்பது குறித்து சொல்லவேண்டுமானால், வட்டாட்சியர் அலுவலகம் என்றால் அங்கே மக்கள் நிறைய வருவார்கள்.—முன்பெல்லாம் நடந்து வருவார்கள், இப்போதும் நடந்து வருகிறார்கள், பலர் வாகனங்களிலும் வருகிறார்கள்.—வாகனங்கள் வருவது, போவது, நிறுத்துவது என்றால் அதிகமான இடம் வேண்டும். முக்கியமான இடம். அதற்கு அதிகமாக இடம் வேண்டும். குறைந்தபட்சம் 5 ஏக்கர், 10 ஏக்கராவது இருக்க வேண்டும் என்று அரசு ஒரு நியதியை வைத்திருக்கிறது. அதற்கேற்றவாறு நல்ல விசாலமான இடத்தில் அதுவும் 70 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படுகிறது. பெரிய கட்டிடமாகக் கட்டப்படுகிறது. அதற்கேற்ற இடமாகத் தேர்ந்தெடுத்துக் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 24, திருமதி இலதா பிரியகுமார், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

24—

கிருஷ்ணாப்பேட்டை மக்களுக்குப் பட்டா வழங்குதல்

*** 26057**—திருமதி இலதா பிரியகுமார் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் வட்டம், கிருஷ்ணாப்பேட்டை 7-வது தெருவில் வசித்து வரும் மக்களுக்கு பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை. ஏனெனில் அவர்கள் ஆக்ரமிப்பு செய்துள்ள நிலம் இரயில்வே துறைக்குச் சொந்தமானது.